# ச.கண்ணனூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை : திரு. த.குணசேகரன், எம்.காம்., பி.எல்.,

க.வ.அ.எண். : 26/2011-12

நாள் : 27.07.2011

பொருள் : கட்டிட அனுமதி– பேரூராட்சி நிர்வாகம்– திருச்சிராப்பள்ளி மாவட்டம்– ச.கண்ணனூர் பேரூராட்சி– தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 உட்பிரிவு 200 & 201–வது பிரிவின் படி கட்டிடம் கட்ட அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது.

பார்வை : 1. திரு.T.V.முரளி அவர்களின் விண்ணப்பம் நாள் : 27.05.2011.

2. திருச்சி நகர் ஊரமைப்பு துறை கடித ந.க.எண்.59/2011 தி.ம.3 நாள் 27.06.2011.

3. தொடர்புடைய ஆவணங்கள்

B2 form 27/7/2011 2014

**உத்திரவு**

திரு.T.V.முரளி, மங்களம் புரோமோட்டர்ஸ், ஸ்ரீரங்கம் என்ற நிறுவனம் பார்வை (1)–ல் காணுமாறு ச.கண்ணனூர் பேரூராட்சி வார்டு எண் 4, சென்னை மெயின்ரோடு பகுதியில் பழைய சர்வே எண்.72, 5சி, 6பி, 7, 10பி மற்றும் 11, 73/1பி, 2, 3, 15 மற்றும் 16ஏ–க்கு புதிய சர்வே எண். 81/5சி மற்றும் 82/1பி1–ல் உள்ள இடத்தில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடங்கள் கட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பார்வை (2)–ல் காணும் கடிதத்தில் திருச்சி நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களால் கட்டிட வரைபடம் அங்கீகரிக்கப்பட்டு உத்திரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து கீழ்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு அடுக்குமாடி குடியிருப்பு கட்டிடம் கட்டிக்கொள்ள 27.07.2011 முதல் 26.07.2014 முடிய (மூன்றாண்டுகளுக்கு) அனுமதித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

**நிபந்தனைகள்**

1. மனை எல்லையிலிருந்து 15 மீட்டருக்கு அப்பால் புள்ளம்பாடி வாய்க்காலான பொதுப்பணி துறையின் புறம்போக்கு இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் ஏற்படாவண்ணம் உரிய எல்லைகற்கள் நடப்பட வேண்டும் மற்றும் புள்ளம்பாடி வாய்க்காலின் வலது கரையைவிட உயரத்தில் குடியிருப்பு பகுதி அமைக்கப்பட வேண்டும்.
2. உத்தேச வணிகம் மற்றும் குடியிருப்பு உபயோக கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்படவேண்டும்.
3. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அதன் பயனுக்காகவே பயன்படுத்தப்பட வேண்டும்.
4. மனையில் காண்பிக்கப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலை நிறுத்தப்பட வேண்டும்.
5. கட்டிடங்கள் மற்றும் படிகள் முதலியவைகள் மனுதாரரின் சொந்த இடத்திற்குள் இருக்க வேண்டும். கதவுகள் வெளிப்பக்கம் திறக்கும்படியாக இருக்கக் கூடாது.

Scanned by CamScanner

6. கட்டிடத்திற்கு அனுமதி பெற்ற இடத்தில் வைசு கட்டிடம் கட்டுவதற்கு மண் எடுக்கக்கூடாது.
7. அங்கீகாரம் பெற்ற பிளானுக்கு மாறுதல் இல்லாமல் கட்டிடம் கட்ட வேண்டும். மாறுதல் செய்வதாய் இருந்தால் முன்கூட்டியே நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருச்சி மற்றும் பேரூராட்சி அலுவலகத்தில் அனுமதி பெற்றுக் கொண்ட பிறகே செய்ய வேண்டும்.
8. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ளவாறும், அரசாணை எண்.138 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள் 11.10.2002ன் படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
9. உத்தேச கட்டிடத்திலிருந்து வெளியேறும் கழிவுநீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைகளுக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்தசெலவில் செய்து தர வேண்டும்.
10. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்புசாதனம் பொருத்தப்பட வேண்டும்.
11. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படி தேவையான அளவுக்கு தீதடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்படவேண்டும்.
12. அரசாணை எண்.341 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (ந.நி–1) நாள் 03.11.2001ன்படி செப்டிக் டேங்கில் 'U' Trap அமைக்கப்பட வேண்டும்.
13. சுற்றுசூழல் மற்றும் வனத்துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு 'Fly Ash Bricks' மற்றும் Materials பயன்படுத்தப்பட வேண்டும்.
14. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மைநகல்) கட்டுமானப்பணி நடைபெறும்போது மனையிடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில ஒட்டப்பட்டிருக்க வேண்டும்.
15. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்திரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்கப்படவேண்டும்.
16. கக்கூஸ், சாக்கடைத்தொட்டி முதலியவை சுகாதார முறைப்படி தளம் போடப்பட்டும் எளிதாக சுத்தம் செய்ய ஏதுவாகவும் இருக்க வேண்டும்.
17. மதராஸ் பப்ளிக் ஹெல்த் ஆக்ட் 26 மற்றும் 33வது செக்ஷன்படி சர்ட்டிபிகேட் பெறாமல் மேற்படி கட்டிடத்தில் குடியேறவோ/ குடி வைக்கவோ கூடாது.
18. கட்டிடம் முடிந்த / குடியேறின 15 நாட்களுக்குள் அதன் விபரம் செயல் அலுவலர் அவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.
19. வீட்டின் முன்னால் உள்ள எலக்ட்ரிக் லயனுக்கும் கட்டிடத்திற்கும் இடையே உள்ள தூரம் 6அடி இடை மட்டமும் ஜன நடமாட்டம் இல்லாத பகுதிகள் 10 அடி உயரமும் (Horizontally) ஜன நடமாட்டமும் உள்ள பகுதியில் 15அடி உயரமும் விட்டு (Vertically) கட்டிடம் கட்ட வேண்டும்.

இணைப்பு : அங்கீகரிக்கப்பட்ட வரைபடங்கள்

செயல் அலுவலர்,
ச.கண்ணனூர் பேரூராட்சி,
சமயபுரம்.

பெறுபவர் : திரு.T.V.முரளி, மங்களம் புரோமோட்டர்ஸ், ஸ்ரீரங்கம்.

நகல் : 1. வரித்தண்டலர், ச.கண்ணனூர் பேரூராட்சி, உரிய நடவடிக்கைக்கு,
2. கோப்புக்கு –1

Scanned by CamScanner

# நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள்

807, அண்ணாசாலை சென்னை - 600 002

முன்னிலை : திரு. ஆ.கார்த்திக், இ.ஆ.ப.,

www.tn.gov.in/dtcp

email id: dtcp@vsnl.net

நாள் : 15.06.2011

ந.க. எண் : 4653/2011பிஏ2

பொருள் : நகர் ஊரமைப்பு - கட்டிடம் - திருச்சிராப்பள்ளி மாவட்டம் - மண்ணச்சநல்லூர் வட்டம், ச.கண்ணனூர் பேரூராட்சி / மேற்கு கிராமம், நிலஅளவை எண் : 81/5சி மற்றும் 82/1பி1-ல் 5350.80 சதுரமீட்டர் பரப்பு மனை ஒப்புதல் - 114 குடியிருப்புகள் மற்றும் 2 வணிகம் புரொபஷனல் அலுவலகம், டிபார்ட்மெண்ட் ஸ்டோர் மற்றும் குடியிருப்பு ஸ்டில்ட் தளம் + முதல் தளம் + 3 தளம் கொண்ட உபயோகக் கட்டுமானம் - கட்டட அனுமதி வழங்குதல் - குறித்து.

பார்வை :
1) திரு. T.V.முரளி மங்களம் புரமோட்டர்ஸ், திருச்சி என்பவரது மனு நாள் : 07.01.2011.
2) செயல் அலுவலர், ச.கண்ணனூர் பேரூராட்சி கடிதம், ந.க. எண் : 254/2010, நாள் : 20.10.2010.
3) உதவி இயக்குநர், திருச்சி மண்டலம் ந.க.எண் : 59/2011திம, நாள் : 09.02.11.
4) நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க. எண் : 9278/2007பிஏ1, நாள் : 16.09.09.
5) அரசாணை (நிலை) எண் : 161, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் : 09.09.2009.
6) நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண் : 7486/09பிஏ2, நாள் : 16.04.09.

- - - - -

**உத்தரவு :**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், ச.கண்ணனூர் பேரூராட்சி, ச.கண்ணனூர் மேற்கு கிராமம், நிலஅளவை எண்கள் : 85/5சி மற்றும் 82/1பி1ல் 5350.80 சதுரமீட்டர் பரப்பு கொண்ட மனைக்கு "ABCDEFGHIJ" என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும், அம்மனையில்

| | | |
|---|---|---|
| ஸ்டில்ட் தளம் | - 2303.42 சதுரமீட்டர் பரப்பில் - வாகனம் நிறுத்துமிடம் | |
| முதல் தளம் | - 2043.75 சதுரமீட்டர் பரப்பில் - 27 குடியிருப்புகள் மற்றும் | வணிகம்-1 |
| 2ம் தளம் | - 2043.75 சதுரமீட்டர் பரப்பில் - 27 குடியிருப்புகள் மற்றும் | வணிகம்-1 |
| 3ம் தளம் | - 2043.75 சதுரமீட்டர் பரப்பில் - 30 குடியிருப்புகள் | - |
| 4ம் தளம் | - 2043.75 சதுரமீட்டர் பரப்பில் - 30 குடியிருப்புகள் | - |
| மொத்தம் : | 114 குடியிருப்புகள் | வணிகம்-2 |

..2.

Scanned by CamScanner

மேற்கண்ட உத்தேச வணிகம் மற்றும் குடியிருப்பு அடுக்குமாடி உபயோகக் கட்டுமானத்திற்கு மனை ஒப்புதல், நிபந்தனைகளுடன் கட்டட அனுமதி, திட்ட அனுமதி வழங்க இசைவு அளிக்கப்படுகிறது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட கட்டிட வரைபடத்திற்கு க.வ/ந.ஊ.இ.எண்.116/2011 என எண்ணிட்டு அனுப்பப்படுகிறது.

<u>**சிறப்பு நிபந்தனைகள்**</u> :-

1. கட்டிட அனுமதிக்கு இசைவளிக்கப்பட்ட இடஅமைப்பு வரைபடத்தில் கண்டுள்ள பொது உபயோக ஒதுக்கீடு திறவிடங்கள் மற்றும் அவற்றிற்கான அணுகுவழி ஆகியவற்றை தானமாக பத்திர பதிவு செய்து மனுதாரரால் சம்மந்தப்பட்ட உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்படவேண்டும். பத்திர நகல்கள் இவ்வலுவலகத்திற்கும், சம்மந்தப்பட்ட மண்டல உதவி இயக்குநர் அலுவலகத்திற்கும் ஒருவார காலத்திற்குள் அனுப்புதல் வேண்டும்.
2. பொது ஒதுக்கீடு திறவிடங்கள் மற்றும் அதற்கான அணுகுவழி ஆகியவற்றை நிறுவனத்தினர் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெற்று பராமரிக்கப்பட வேண்டும்.
3. பொது ஒதுக்கீடு திறவிடங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி தானமாக பெற்றுக் கொண்டு, அதன் விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். இதனை சம்மந்தப்பட்ட உதவி இயக்குநர், திருச்சி மண்டலம் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
4. செயற்பொறியாளர், பொதுப்பணித் துறை, நீர்வள ஆதாரத் துறை, ஆற்றுப் பாதுகாப்புக் கோட்டம், திருச்சிராப்பள்ளி அவர்களின் தடையின்மை சான்றில் (கடித எண். 218எம்/ கோ.30/2011/வ.3/ நாள்.11.03.2011ல்) தெரிவிக்கப்பட்டுள்ளவாறு மனுதாரரின் மனை எல்லையிலிருந்து 15 மீட்டருக்கு அப்பால் புள்ளம்பாடி வாய்க்காலான பொதுப்பணித் துறையின் புறம்போக்கு இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் ஏற்படாவண்ணம் உரிய எல்லை கற்கள் நடப்பட வேண்டும் மற்றும் புள்ளம்பாடி வாய்க்காலின் வலது கரையைவிட உயரத்தில் குடியிருப்பு பகுதி அமைக்கப்பட வேண்டும்.

<u>**நிபந்தனைகள்**</u> :-

1. உத்தேச வணிகம் மற்றும் குடியிருப்பு உபயோகக் கட்டுமானத்திற்கு Solar Water Heating System அமைக்கப்பட வேண்டும்.
2. வரைபடத்தில் உத்தேசிக்கப்பட்டவாறு வாகனம் நிறுத்துமிடம் அந்த பயனுக்காகவே பயன்படுத்தப்படவேண்டும்.
3. மனையில் காட்டப்பட்டுள்ள திறவிடங்கள் அதன்படியே நிலைநிறுத்தப்பட வேண்டும்.
4. தற்போது ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்திற்கு மாறாக கட்டிடத்தில் எவ்வித மாற்றமும் செய்தல் கூடாது. மாற்றங்கள் ஏதேனும் செய்வதாக இருந்தால் இவ்வலுவலகத்தின் முன் அனுமதி பெறப்பட வேண்டும்.
5. மழைநீர் சேகரிப்பு வசதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறும், அரசாணை எண் : 138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:11.10.2002-ன்படி கட்டிடத்தில் செயல்படுத்தப்பட வேண்டும்.
6. உத்தேச கட்டிடத்தில் இருந்து வெளியேறும் கழிவு நீர் தனியார் வாகனங்கள் மூலம் வெளியேற்றவும், உபயோகிப்போருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் இதர தேவைக்கான நீர் வசதிகள் ஆகியவை மனுதாரர் தனது சொந்த செலவில் செய்து தர வேண்டும்.
7. மனையில் அமையும் குடிநீர் மேல்நிலைத்தொட்டி மற்றும் கிணறு ஆகியவற்றுக்கு கொசு தடுப்பு சாதனம் பொருத்தப்படவேண்டும்.
8. உத்தேச கட்டுமானத்தில் விதிப்படித் தேவையான அளவுக்கு தீ தடுப்பு மற்றும் தீயணைப்பு சாதனங்கள் அமைக்கப்பட வேண்டும்.

Scanned by CamScanner

9. அரசாணை எண்.341/ந.நி. மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.1) துறை, நாள் : 03.11.04-ன் படி செப்டிக் டேங்க்கில் " U " Trap அமைத்தல் வேண்டும்.

10. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அறிவிக்கையின்படி உத்தேச கட்டிடத்திற்கு FLY ASH BRICKS மற்றும் Materials பயன்படுத்தப்படவேண்டும்.

11. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின் நகல் (உண்மை நகல்) கட்டுமானங்கள் நடைபெறும்போது அவ்விடத்தில் அனைவருக்கும் தெரியும் வகையில் பலகையில் நிறுவப்பட்டிருக்க வேண்டும்.

12. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் அசல் நகலுடன் ஏற்கனவே அளிக்கப்பட்ட உத்திரவு மற்றும் இவ்வாணையின் நகல் வாங்குபவர்களுக்கு வழங்க வேண்டும்.

முத்திரை இடப்பட்ட வரைபடங்கள் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

பார்வை 4, 5 மற்றும் 6-ல் காணும் சுற்றறிக்கைகள் மற்றும் அரசாணையின்படி உரிய மனை ஒப்புதல், நன்னிலை வரி, உள்கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிக் கட்டணம் மண்டல அலுவலகத்தால் பெற்று இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட பின்னர் திட்ட அனுமதி வழங்கப்படல் வேண்டும்.

திருச்சி மண்டல உதவி இயக்குநர் அவர்கள் மேற்கொண்டு உத்திரவினை விண்ணப்பதாரருக்கு வழங்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மனுதாரர் மேற்கொண்டு உதவி இயக்குநர், திருச்சி மண்டலம் அவர்களை அணுகுமாறு தெரிவிக்கப்படுகிறார்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட உத்தரவு கடிதம் மற்றும் வரைபடங்கள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை சான்றினை அனுப்புமாறு திருச்சி மண்டல உதவி இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஒம்.) ஆ.கார்த்திக்.
நகர் ஊரமைப்பு இயக்குநர்.

**<u>இணைப்பு</u>** :-

மூன்று தொகுப்பு வரைபடங்கள்

**<u>பெறுநர்</u>** :-

உதவி இயக்குநர் (பொ.)
திருச்சிராப்பள்ளி மண்டலம்,
திருச்சி.

**<u>நகல்</u>** :-

1) திரு. T.V.முரளி,
மங்களம் புரமோட்டர்ஸ்,
24, ஸ்ரீ விஜயரங்கம், ராயர்தோப்பு,
ஸ்ரீரங்கம்,
திருச்சிராப்பள்ளி - 06.

2) செயல் அலுவலர்,
ச.கண்ணனூர் பேரூராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3) உதிரி-1 (கோப்புக்கு)

4) Applicant e-mail : info@mangalampromoters.com

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

15/06/11

நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர்.

Scanned by CamScanner